

# ராம்விஜய் கொய்யா சாகுபடி உயிர் உரம்

5, கடலூர்–பாண்டி மெயின் ரோடு, கன்னியகோயில், புதுவை–607 402.

www.romvijaybiotech.com

# கொய்யா சாகுபடி முறை

கொய்யா சாகுபடி சமீப காலத்தில் அதிகரித்து வருகின்றது. கொய்யாப் பழத்தில் உயிர்ச்சத்தான வைட்டமின் சியும் உயிர்வளியேற்றத் தடுப்பான்களும் (Antioxidants) அதிகமாக உள்ளது. எனவே இதன் முக்கியத்துவம் அதிகரித்து வருகின்றது.

**கன்றுகள் நேர்த்தி :**

கொய்யா கன்றுகள் பதியன்களாகவும் ஒட்டுகன்றுகளாகவும் பாலிதீன் பைகளில் வளர்த்து தருகின்றனர். இவை நட்டவுடன் நன்கு வேர்பிடித்து வளர ராம்-அசோஸ்பைரில்லம் 1 கிலோ ராம்-சூடோமோனாஸ் 1 கிலோ, ராம்-டிரைபேமிக்ஸ் 1 கிலோ ராம்-ரூட்குரோ 250 மில்லியை சுமார் 50 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கருக்குத் தேவையான கன்றுகளின் மேல் நடுவதற்கு ஓரிரு நாட்களுக்கு முன் அல்லது நடும் தருணத்தில் பூவாளியால் ஊற்ற வேண்டும். இதனால் நன்கு வேர்பிடிப்பதுடன் மண்மூலம் பரவும் நோய்களும் நூற்புழுக்களும் கட்டுப்படுத்தப்படுகின்றன.

**நடவு செய்தலும் பராமரிப்பும் :**

நடவு வயலில் 5 வகையான உயிர் உரங்கள், சூடோமோனாஸ் மற்றும் நுண்ணூட்டங்கள் அடங்கிய 40 கிலோ கொண்ட ராம்-விஜய் பழ பயோபேக்கேஜ்ஜை சுமார் 500 கிலோ தொழுஉரம் அல்லது மண்ணுடன் கலந்து குழி ஒன்றுக்கு 2 கிலோ வீதம் இட்டு பின்னர் நடவு செய்யவும். இது கன்றுகளின் வளர்ச்சியை தூண்டுகின்றது.

பதியன்கள் வளர்ந்து பலன்தர 1 – 3 ஆண்டுகள் ஆகும். அதுவரை ஆண்டுக்கு இருமுறை உரமிடவேண்டும். ராம்-விஜய்யின் பாலிபங்ஷனல் மைக்ரோப்ஸ் மற்றும் பயோபூஸ்டு ஹியூம் மற்றும் MNK முன்றையும் ஒரு ஏக்கருக்கு ஒவ்வொன்றும் 1 லிட்டர் வீதம் போதுமான தண்ணீரில் கலந்து மரம் 1 க்கு ஒரு லிட்டர் வீதம் தூரினில் ஊற்றவும். இது மரம் நன்றாக வளர உதவும், இதனை பயன்படுத்தும்போது இரசாயன உரம் இடவேண்டியது இல்லை.

**வாடல்நோய் மற்றும் நூற்புழுக்களை கட்டுப்படுத்த :**

பல்வேறு பூஞ்சணங்கள் கொய்யாவின் வேரினைத் தாக்குகின்றன. பூஞ்சணத்துடன் நூற்புழுக்களும் சேர்ந்து தாக்கும். இதனால் மரம் வாடி மடிவதுண்டு, இவற்றைக் கட்டுப்படுத்த டிரைபேமிக்ஸ் மற்றும் சூடோமோனாஸ் 2 சத கரைசலை மரம் 1 க்கு 1 லிட்டர் வீதம் அடிமரத்தின் மீது ஊற்றி தூரில் இறங்குமாறு செய்யவேண்டும். இதனுடன் ஏக்கருக்கு பாலிபங்ஷனல் மைக்ரோப்ஸ் 1 லிட்டர் மற்றும் பயோபூஸ்டு ஹியூம் 1 லிட்டர் வீதம் கலந்து ஊற்றினால் தாக்குண்ட மரங்கள் தெளிந்து வீரியமாக வளரும்.

**பழ அழுகல் நோய்கள் / பழசொறிநோய் / ஆந்த்ரக்னோஸ் / தண்டு கருகல் நோய்களைக் கட்டுப்படுத்த :**

பழ அழுகல், சொறி நோய் மற்றும் ஆந்த்ரக்னோஸ் நோய்கள் பூஞ்சணங்களால் உண்டாகின்றன. சிறிய, கரிய குழிந்த புள்ளிகள் காய்கள் மேல் தோன்றி பரவும். தண்டு கருகல் நோயில் பூஞ்சணம் தண்டுகளைத் தாக்கி இலைகள் உதிரும். தண்டுகள் மேலிருந்து கருகுவதால் இதனை டைபேக் என்பர்.

இவற்றைக் கட்டுபடுத்த நோயின் அறிகுறிகள் தோன்றியதும் சூடோமோனாஸ் 2 சதக் கரைசலைத் தெளிக்கவும். பின்னர் 7-10 நாட்கள் இடைவெளியில் மீண்டுமொருமுறை தெளிக்கவும். காய்களில் தோன்றும் நோய்களைக் கட்டுப்படுத்த காய்பிடிக்க ஆரம்பித்தும் முன் எச்சரிக்கையாக சூடோமோனாஸ் 2 சதக் கரைசலைத் தெளித்தல் நல்லது. காய்கள் பரிக்கும் தருணத்தில் திரவவடிவ ராம்-சூடோமோனாசை ஏக்கருக்கு 500 மில்லி வீதம் போதுமான அளவு தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

### தண்டு மற்றும் காய்த்துளைப்பான்களைக் கட்டுப்படுத்த :

கொய்யா மரத்தை பல்வேறு வகையான தண்டு துளைப்பான்களும் பட்டையை அரிக்கும் புழுக்களும் தாக்குகின்றன. இவை தண்டிலும் மரக்கிளைகளிலும் துளைத்து உள்ளிருந்து சேதம் விளைவிப்பவை. தாக்குண்ட பகுதிகள் காய்ந்து மரமும் காய்ந்துவிடும். இவற்றைக் கட்டுப் படுத்த ராம்-கிரப்கில் 2 சதக் கரைசலைத் தெளிக்கவும். துளைப்பான்களால் வெளிதள்ளப்படும் மரத்தூளை நீக்கி சுத்தம்செய்த பின் மரத்திலும் பட்டைகளின் மீதும் இதனைத் தெளிக்கவேண்டும். துளைகளில் கரைசலை ஊற்றுவதும் நல்லது.

காய்களை பல்வேறு வகையான காய்த்துளைப்பான்கள் தாக்குகின்றன. காய்த்துளைப்பான்களைக் கட்டுபடுத்த பூக்கும் பருவத்திலிருந்து 10 நாட்கள் இடைவெளியில் 2 அல்லது 3 முறை ராம்-கிரப்கில் 2 சதக் கரைசலைத் தெளிக்கவும். முட்டைகளிலிருந்து வெளிவரும் இளம்புழுக்களை கட்டுப்படுத்துவது எளிது.

### அசுவணி, இலைப்பேன்கள், சப்பாத்தி பூச்சிகளைக் கட்டுப்படுத்த :

இலைகளையும் காய்களையும் தாக்கும் இவற்றைக் கட்டுப்படுத்த ராம்-வெரிலாக் 2 சதக் கரைசலை பூச்சிகள் தோன்ற ஆரம்பித்ததும் ஒருமுறையும் பின்னர் 7-10 நாட்கள் இடைவெளியில் மீண்டும் ஒருமுறையும் தெளிக்கவும்.

### நுண்ணூட்டச் சத்து குறைபாடுகளை நிவர்த்தி செய்ய :

கொய்யா மரம் நல்ல மகசூல் தர நுண்ணூட்டங்களான இரும்பு, துத்தநாகம், தாமிரம், போரான், மக்னீசியம், மாங்கனீசு ஆகியவையும் அவசியம், இவற்றை உள்ளடக்கிய ராம்-நுண்ணூட்டக் கலவையை ஏக்கருக்கு 10 கிலோ வீதம் உரமிடும்போது இட வேண்டும். ஆண்டுக்கு இருமுறை அளித்தல் நல்லது. நுண்ணூட்டக் குறைபாட்டினை நிவர்த்தி செய்ய நீரில் எளிதில் கரையும் ராம்-எம் என் போலியார் கலவையை ஏக்கருக்கு 1 கிலோ வீதம் போதுமான அளவு தண்ணீரில் கலந்து தெளிக்கவேண்டும். புது தளிர்வந்தவுடன் ஒரு முறையும், பின்னர் 1 மாத இடைவெளியிலும் பூக்கும் பருவத்திலும், காய்கள் தோன்றியதும் ஆக 4 முறை தெளித்தல் அவசியம், இதனால் காய்கள் திரட்சியாகக் காணப்படும். இலைகள் நிறம் மாறுவதும் சொறிகாய்கள் தோன்றுவதும் குறையும். சொட்டு நீர்ப்பாசனம் மூலமும் இதனைப் பயன்படுத்தலாம்.

## மடித்துகட்டியபின் நேர்த்தி :

பூக்கள் அதிகமாகப் பூக்கவும் அதன் மூலம் மகசூலைப் பெருக்கவும் கொய்யாக் கிளைகளை மடித்து கட்டுகின்றனர். அதில் புதுத்துளிர் தோன்றி பூக்கள் அதிகமாகின்றது, இந்த இளம்தளிர் பூச்சிநோய் தாக்குதலுக்கு ஏற்றது. எனவே தளிர் வந்தவுடன் பாதுகாப்பு முறைகளைக் கையாள்வது அவசியம். தளிர்வந்ததும் ராம்–கிரப்கில், ராம்–வெரிலாக், ராம்–சூடோமோனாஸ் மற்றும் ராம்–எம் என் போலியார் ஒவ்வொன்றையும் 1 கிலோ வீதம் 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். இதனை முன் எச்சரிக்கை நடவடிக்கையாகச் செய்தல் அவசியம். பூச்சி நோய்கள் தோன்றினால் அதற்கேற்ப மேலே சொன்ன முறைகளில் தடுப்புமுறைகளைக் கையாளவேண்டும்.

குறிப்பு : காய்கள் அறுவடையாகும் போது திரவ வடிவிலான உயிர்நோய் தடுப்பான்களையும் உயிர் பூச்சி கொல்லிகளையும் ஏக்கருக்கு 500 மில்லி வீதம் பயன்படுத்துவது அவசியம். இது காய்கள்மேல் வெள்ளையாக படியாது.

உயிர்நோய் தடுப்பான்களையும் உயிர்பூச்சிகொல்லிகளையும் சேர்த்து பயன்படுத்தலாம். ஆனால் இரசாயனங்களுடன் கலத்தல் கூடாது. இயற்கை பூச்சி விரட்டிகளுடனும், பஞ்சகாவிய போன்றவற்றுடனும், சேர்த்து பயன்படுத்தலாம்.

## கொய்யா செடிகளை தாக்கும் பூச்சிகளும் மற்றும் நோய்களும்




**Dr. C. Vaithilingam** M.Sc. (Ag)., Ph.D.,
Cell : +91 94432 39092
E-mail : vaithi52@gmail.com

**Dr. S. Anthoni Raj** M.Sc. (Ag)., Ph.D.,
Cell : +91 94438 11663

**Dr. V. Vijay** Ph.D.,
Cell : +91 96555 39092
E-mail : vvijayaganapathy@gmail.com


தேவைக்கு அணுகவும்
ஏ. அருண்குமார்
செல் : 73394 69442


ECO-FRIENDLY
ROMVIJAY

ராம்விஜய் பயோடெக் (பி) லிட்.,
5, கடலூர்–பாண்டி மெயின் ரோடு,
கன்னியகோயில், புதுவை–607 402.
www.romvijaybiotech.com